2000 மே 10]

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் ராமர் என்பவருடைய சாவு குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. சொ. கருப்பசாமி, திரு. டி. மணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற வினாவையும் எழுப்பியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தினுடைய காவல் துறையும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தந்துள்ள விவரங்களை, அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தந்துள்ள விவரங்கள் இவை. நானாக எதையும் கணித்து இப்படித்தான் நடந்தது என்று சொல்லவில்லை, ஏனென்றால் மேற்கொண்டு விசாரணை நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருப்பதால், தந்துள்ள விவரங்கள்:

வாசுதேவநல்லூர் மாரியம்மன் கோயில் பூக்குழி 2-5-2000 அன்று மாலை 4-15 மணி முதல் 5-00 மணி வரை நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அதிலே கலந்துகொண்டு தீ மிதித்தார்கள்.

பகல் சுமார் 2-00 மணி முதல் தீ மிதிக்கும் இடத்தைச் சுற்றி சங்கரன்கோயில் உதவி காவல் கண்காணிப்பாளர், புளியங்குடி ஆய்வாளர் மற்றும் 100 காவலர்கள் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள்.

மாலை சுமார் 3-30 மணிக்கு, கீழப்புதூரைச் சேர்ந்த நாற்பது வயதுடைய அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ராமர், குடிபோதையில் அங்கே தள்ளாடிக்கொண்டே வந்தார். வாசுதேவநல்லூர் பஜாரில் சித்திரைக் கனி என்பவரின் பூச்சிமருந்துக் கடையில் பூச்சிமருந்து பாட்டில் கேட்டார். அவர் குடிபோதையில் இருந்ததாலும், வழக்கமாகக் குடித்துக்கொண்டு அடிக்கடி பஜாரில் தள்ளாடியபடி திரியும் பழக்கம் உடையவர் என்பதாலும் கடைக்காரர் பூச்சிமருந்து தர மறுத்து விட்டார்.

முற்பகல் 9-50

பின்பு மாலை 5-30 மணியளவில் Kayalvizhi Readymade Store-க்கு மேற்கே தென்காசி-மதுரை Main-Road-ல் பிதற்றிக்கொண்டு ராமர் கிடந்துள்ளார். வாயில் நுரை தள்ளியபடி கை கால் உதறிக்கொண்டு கிடந்த ராமரை அருகில் Medical Store

வைத்திருக்கும் ம.தி.மு.க. நகரச் செயலாளர் மகாலிங்கம் பார்த்துள்ளார். அப்போது ராமர் வாயிலிருந்து பூச்சிமருந்து வாடை அடித்துள்ளது. அதுசமயம் அங்கு வந்த வாசுதேவநல்லூரைச் சேர்ந்த ஜெயலலிதா பேரவை துணைச் செயலாளர் ரங்கசாமியும் மற்றும் ஒருவரும் சேர்ந்து ஒரு தள்ளுவண்டியில் ராமரைத் தூக்கிப்போட்டு வாசுதேவநல்லூர் Main Road-ல் உள்ள டாக்டர் திருமலை கணேசனிடம் சிகிச்சைக்குச் சேர்த்துள்ளார்கள். டாக்டர், வயிற்றைச் சுத்தம் செய்து முதலுதவி செய்துள்ளார். பூச்சிமருந்து போன்ற விஷத்தை யாராவது அருந்தினால் உடனடியாக வயிற்றைச் சுத்தம் செய்வது மருத்துவர்களின் வாடிக்கை. உடனே ரங்கசாமி வாடகைக் கார் எடுக்க கடைத் தெருவுக்கு வந்துள்ளார். அங்கு வாசுதேவநல்லூரைச் சேர்ந்த தங்கப்பழம், வாசுதேவநல்லூர் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ஆயுள்ராஜா பாண்டியன் ஆகிய இருவரையும் காருடன் பார்க்க, ராமரை அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல காரைக் கேட்டுள்ளார். கார் அவசரமாக சிவகிரிக்குப் போக இருப்பதால், பணம் தருகிறேன் என்று கூறி ஆயுள்ராஜா பாண்டியன் ரூ.200-ஐ ரங்கசாமியிடம் கொடுத்துள்ளார். இதற்கிடையில் ரங்கசாமி மருத்துவமனைக்குச் சென்றபோது இரவு 8½ மணிக்கு ராமர் இறந்துவிட்டதாக டாக்டர் கூறியுள்ளார். இதன்பிறகு வெளி ஆட்களின் தூண்டுதலின்பேரில், இறந்துபோன ராமரின் 15 வயதுடைய மகள் தங்கம், காவல் துறை ஆய்வாளர் ராமரை பூக்குழி நடந்த பகுதியிலே பிடித்துத் தள்ளி அடித்ததால்தான் இறந்துள்ளார் என்று கொடுத்த புகாரின்பேரில் வாசுதேவநல்லூர் காவல் நிலையக் குற்ற எண் 106/2000 சட்டப் பிரிவு 174 கு.வி.ந.ச. -ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தென்காசி வருவாய்க் கோட்டாட்சியரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

ராமரின் சடலம் தென்காசி அரசு மருத்துவமனையில் 3-5-2000 அன்று பிற்பகலில் இரண்டு மருத்துவர்களால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. பிரேதப் பரிசோதனையில் இறந்தவரின் உள் உறுப்புகள் யாவும் நல்லநிலையில் இருந்ததாகவும், வயிறு மற்றும் குடல் காலியாக இருந்ததாகவும், அது ஏற்கெனவே மருத்துவமனையிலே முற்றாகக் கழுவப்பட்டுவிட்ட காரணத்தினால் வயிறு மற்றும் குடல் காலியாக இருந்ததாகவும், இறந்தவர் விஷம் அருந்தினாரா என்பது குறித்து குடல் உறுப்புகளை இரசாயனப் பரிசோதனை செய்த பின்னரே கருத்துக் கூற முடியும் என்றும் பிரேதப் பரிசோதனை செய்த மருத்தவர் தெரிவித்துள்ளார். பிரேதப்

பரிசோதனைக்குப் பின்னர், இறந்து போனவரின் சடலம் உறவினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஆய்வாளரின் தொடர் சாராய வேட்டையினாலும், அவருடைய கண்டிப்பான செயல்பாட்டினாலும், வேண்டுமென்றே ஆய்வாளரைச் சம்பந்தப்படுத்தி புகார் கூறப்பட்டுள்ளதாகப் போலீஸ் தரப்பிலே சொல்லப்படுகிறது.

இறந்துபோன ராமரின் முதல் மற்றும் இரண்டாவது மனைவிகள் காரணமாக ஏற்பட்டுள்ள தகராறுகள் காரணமாக ராமர். மனம் உடைந்து தினந்தோறும் குடித்துவிட்டு நிம்மதி இழந்து இருந்ததாகவும் தெரிகிறது. தென்காசி கோட்டாட்சித் தலைவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையைப் பெற்று உடனடியாக வாசுதேவநல்லூர் அருணகிரி மருத்துவமனைக்கு விரைந்து, இறந்தவருடைய பிரேதத்தைப் பார்வையிட்டு, பிரேத விசாரணை செய்துள்ளார். கூடியிருந்த மக்களிடம் ராமர் இறந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் எனக் கோட்டாட்சித் தலைவர் தெரிவித்ததன்பேரில் கூட்டத்தினர் கலைந்து சென்றுள்ளனர் என்றும், தென்காசி கோட்டாட்சித் தலைவர் இறந்தவருடைய உடலைப் பார்வையிட்டபோது, பின்வரும் காயங்கள் அவருடைய உடலில் இருந்துள்ளன என்றும் நெல்லை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்:

1. இடது கால் மூட்டுக்கு கீழ் இடது பக்கம் சிறிய காயம்.

2. இடது காலில் ஒரு சிறிய காயம்.

3. மேற்கண்ட காயத்திற்குக் கீழ் இடது காலில் ஒரு சிறிய காயம்.

இந்தக் காயங்கள் எல்லாம் அவர் குடிபோதையிலே கீழே விழுந்தபோது ஏற்பட்ட சிராய்ப்புகள் என்றும், யாரும் அடித்து அதனால் ஏற்பட்ட காயங்கள் அல்ல என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். பிரேத விசாரணை நடத்தி உடலை தென்காசி அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக கோட்டாட்சியர் அனுப்பியதாகவும், தென்காசி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்து முடித்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு *3-5-2000* அன்று இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது என்றும், உடல் உள்உறுப்புகள்

இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன என்றும் தென்காசி கோட்டாட்சியர் தமது விசாரணையிலே தெரிவித்துள்ளார். ராமர் மரணம் குறித்து காவல் துறைத் தரப்பில், அவர் விஷம் அருந்தி இறந்ததாகவும், ராமர் தரப்பைச் சேர்ந்தவர்கள் காவல் துறையினரின் தாக்குதல் காரணமாக இறந்ததாகவும் கூறுவதால் இந்தச் சம்பவம் குறித்து காவல் நிலை ஆணை எண் 145-ன்கீழ் விரிவான விசாரணை நடத்த உத்தரவிடலாம் எனத் தெரிவித்ததன்பேரில் காவல் நிலை ஆணை 145-ன்கீழ் தென்காசி கோட்டாட்சித் தலைவரின் மேல்விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், விசாரணையை இரண்டு வார காலத்தில் முடிக்கும்படி தென்காசி கோட்டாட்சித் தலைவரைக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த விவரங்கள்தான் எனக்குக் கிடைத்துள்ளன. இதை வைத்து மேலும் விசாரணை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். என்ன subject?

திரு. பி.ஆர். சுந்தரம்: முதல்வர் சொன்னதிலிருந்து.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரன், நீங்கள் எப்படிப் பேசுவீர்கள்? மூன்று நாட்களாகக் கேட்டீர்கள். உங்களுக்கு அனுமதி கொடுத்து, உங்களைத்தான் கூப்பிட்டேன். அவைக்கு வருவதே இல்லை. சரி, சொல்லுங்கள்.

முற்பகல் 9-55

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முதலமைச்சர் அவர்கள் பதிலே சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் பதில் சொன்ன பிறகு, திரு. ஈஸ்வரன், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்? இதுகுறித்து ஏதாவது இருந்தால், தனியாகச் சொல்லுங்கள்.